# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF COMMERCE AND MANAGEMENT

## (EXTERNAL DEGREE)

13 OCT 2014

## First Examination in Bachelor of Business Administration/ Bachelor of Economics - 2010/2011

## (Proper/Repeat) (August – October 2014)

## EXB/EXE 1024 Principles of Management

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. நேரம் - 3 மணித்தியாலங்கள்

01. a) *"முகாமைத்துவமானது நிறுவனங்கள் எவ்வகையாயினும், எவ்வளவாகினும் அவற்றின் வெற்றிக்கும் வளர்ச்சிக்கும் தவிர்க்கமுடியாததொன்றாகவும், அவசியமானதாகவும் விளங்குகின்றது."*

இக்கூற்றின் அடிப்படையில் முகாமைத்துவம் என்ற பதத்திற்கு வரைவிலக்கணம் கூறி, பிரதான முகாமைத்துவ மட்டங்களையும் அம்மட்டங்களில் கடமையாற்றுகின்ற முகாமையாளர்களது தொழிற்பாடுகளையும் பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

b) *"முகாமையாளர் குறிப்பிட்ட நிலைமையினை ஆராய்ந்து அந்நிலைமைக்கு ஏற்ப பொருத்தமான திட்டங்களை வகுப்பதற்கு தேவையான அற்றல்களையும் தேர்ச்சித் திறன்களையும் கொண்டிருக்க வேண்டும்.*

பொதுவாக முகாமையாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய இத் தேர்ச்சித் திறன்களை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

c) ஒரு நிறுவனம் கொண்டிருக்கவேண்டிய சிறந்த குறிக்கோளின் பண்புகளை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

02. a) *"நிறுவனத்தினைச் சூழ்ந்துள்ள, நிறுவனத்துடன் தொடர்புடைய காரணிகள் யாவும் சூழல் காரணிகள் என்ற பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது. சூழலில் ஏற்படும் மாற்றங்கள் நிறுவனத்திலும் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன."*

நிறுவனத்தின் நடவடிக்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் அகச் சூழற் காரணிகளை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(08 புள்ளிகள்)

b) *"சூழற்காரணிகள் அடிக்கடி மாற்றமடைவன. சூழற் காரணிகளைக் கருத்திற்கொண்டே நிறுவனம் தனது செயற்பாடுகளைத் திட்டமிடல் வேண்டும். இதனை ஆய்வு செய்ய SWOT ஆய்வானது பாரிய பங்கு வகிக்கின்றது".*

இக்கூற்றின் அடிப்படையில் SWOT ஆய்வின் மூலம் நிறுவனம் பெறக்கூடிய வெளிப்பாடுகளை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(06 புள்ளிகள்)

c) நிறுவன வெற்றிக்கு தடையாக உள்ள காரணிகளை அடையாளம் கண்டு விளக்குக.

(06 புள்ளிக

(மொத்தம் 20 புள்ளிக

03. a) நிறுவனமொன்றில் ஒழுங்கமைத்தலை மேற்கொள்ளும்போது கருத்தில் கொள்ளப்படவேண் தத்துவங்களை பட்டியலிட்டு விளக்குக.

(08 புள்ளிக

b) *"நிறுவனமானது பல பகுதிகளையும், பிரிவுகளையும் கொண்டது"*

நிறுவனத்தின் கட்டமைப்பில் செல்வாக்கு செலுத்துகின்ற பிரதான காரணிகளை அடையா கண்டு விளக்குக.

(06 புள்ளிக

c) பொதுவாக நிறுவன வெற்றிக்கு பிரதானமாக காணப்படும் தீர்மானம் எடுத்தல் காணப்படுகின்ற தடைகளை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(06 புள்ளிக

(மொத்தம் 20 புள்ளிக

04. a) *"திட்டமிடலும் கட்டுப்படுத்தலும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய முகாமைத் செயற்பாடுகளாகும். கட்டுப்படுத்தல் எனப்படுவது, திட்டமிட்டபடி கருமங் மேற்கொள்ளப்படுகின்றதா என உறுதிப்படுத்திக் கொள்வதனைக் குறிக்கு இக்கட்டுப்படுத்தலானது ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய பல படிமுறைகளைக் கொண்டுள்ளது*

இக்கூற்றின் அடிப்படையில் கட்டுப்படுத்தலின் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிக

b) கட்டுப்படுத்தல் செயற்பாட்டின் நுட்பங்களை பட்டியலிட்டு சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிக

c) *"நிறுவனங்களின் வெற்றியானது அவை கடைப்பிடிக்கும் கட்டுப்படுத்தல் செயற்பாட்டி தங்கியுள்ளது"*

மேற்கூறப்பட்ட கருத்தின அடிப்படையில் பிரதான கட்டுப்படுத்தல் செய்முறையினை விளக்கு

(09 புள்ளிக

(மொத்தம் 20 புள்ளிக

05. a) நிறுவன ஊழியர்களை ஊக்கப்படுத்துகின்ற செயற்பாட்டில் ஆபிரகாம் H. மாஸ்லோவி படிமுறை அமைப்பு தேவைக்கேட்பாட்டினை விளக்கப்படத்தின உதவியுடன் விளக்குக

(08 புள்ளிக

b) ஊழியர்களை ஊக்கப்படுத்தல் தொடர்பாக முகாமையாளர் கருத்தில் கொள்ள வேண் விடயங்களை சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிக

c) சிறந்த ஊக்கப்படுத்தல் செய்முறை கொண்டிருக்க வேண்டிய அம்சங்களை விளக்குக

(06 புள்ளிக

(மொத்தம் 20 புள்ளிக